VEEKAY INTERNATIONAL
PASSPORT, VISA
AIR TICKETS
RAIL TICKETS
HOTEL BOOKING
INTERNATIONAL
CONTACT : 9940090852


# தி பிரகாஷ்நகர் டைம்ஸ்
# THE PRAKASH NAGAR TIMES


சுப நிகழ்ச்சிகளுக்கு
மதுரை
பிரியாணி
சிக்கன் & மட்டன்
Cell : 9940090852

Vol. :1 | Issue - 5 | Fortnightly (Tamil & English) | March 5, 2012 | 4 Pages | Price - Rs.2/- | Annual Subscription : Rs. 48/-

## அவரே துணை

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

நான் உன்னுடனே இருக்கிறேன் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். பலர் நம்முடன் கடைசி வரை இருப்பார்கள் என்று நாம் நினைக்கலாம். பலர் நம்முடன் இருப்பதாக சத்தியமும் செய்யலாம். எனினும் நடைமுறையில் அது சாத்தியமில்லாமல் போய்விடக் கூடிய வாய்ப்புகள் எழும்பும் வேளையில் சங்கடமே மிஞ்சும். ஆனால் இயேசு கிறிஸ்து அப்படியல்ல. இஸ்ரவேலின் ஜெயபலமானவர் (இயேசு கிறிஸ்து) பொய் சொல்லுகிறதும் இல்லை. தாம் சொன்னதைப் பற்றி மனஸ்தாப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷன் அல்ல ( 1சாமு 15:29) என்கிறது வேதம். சர்வ வல்ல தேவன் உங்களோடு கூட இருக்கப் போகிறார். சர்வ வ்ல்ல தேவன் நம்மோடு இருப்பதற்கு நமக்கு என்ன தகுதி இருக்கிறது? என நினைக்கலாம். இத்தகைய எண்ணங்கள் நமக்குள் எழும்புவதற்கு காரணமென்ன? (ரோமர் 7:20) கூறுகிறது. நமக்குள் வாசம் செய்கிற பாவமே அப்படி செய்கிறது. நமக்குள் பாவம் இல்லை என்போமாகில் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம்.


இந்த பாவத்தைக் குறித்து சங்கீதக்காரன் கூறுகிறதைப் பாருங்கள். இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (சங் 31:3). இதனிமித்தம் மனிதன் தேவனோடு பேசவும் சேரவும் கூடாமல் போனது. அதனால் தான் ஏசாயா (59:1,2)ல் வேதம் கூறுகிறது. இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவு மில்லை, கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா 59:1,2).

இப்படிப்பட்ட சூழ்நிலையில் சர்வவல்ல தேவன் மனிதனோடு வாசம் செய்வது சாத்தியம் தானா? என்று எண்ணக் கூடும். இந்த பாவத்தை எப்படி போக்கிக் கொள்வது? இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை! யாருடைய இரத்தம் நம்முடைய பாவங்களை சுத்திகரிக்கும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். அவருக்குள் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோசேயர் 1:14).

இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டோருக்கு உண்டாகும் நன்மைகள் :-

1) சமாதானம், 2) சமூகம், 3) சவுக்கியமும் ஆரோக்கியமும்.

**1. சமாதானம் :** இயேசுவின் இரத்தத்தினால் கழுவப் படுவோருக்கு முதலில் வரும் ஆசீர்வாதம் சமாதானம். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. (யோவான் 14:27)ல் இயேசு கூறினார். இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டால் நம்மையும் அறியாமல் நம்மை விட்டு துன்மார்க்கம் அகலும். நம்மை சமாதான குலைச்சலுக்குள் ஆளாக்கினது நம்முடைய துன்மார்க்கம், (ஏசாயா 57:21,22)ல் துன்மார்க்கனுக்கு சமாதானம் இல்லை என்று ஆண்டவர் கூறுகிறார். அந்த துன்மார்க்கம் அகலும் பொழுது நீதி நமக்குள் வருகிறபடியினால் நீதிமான் என்று மனிதன் அழைக்கப்படுகிறான்.



சகோ. நா. அருள் MA.,
Cell : 9381045396 (ஜெபத்திற்கு)

**2. சமூகம் :** இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டோருக்கு கிடைக்கும் இரண்டாவது ஆசீர்வாதம் தேவனுடைய சமூகம் துன்மார்க்கனாய் இருந்த மனிதன் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப் பட்டபடியினால் நீதிமானாக்கப்படுகிறான். செம்மையானவர்கள் உமது சமூகத்தில் வாசம் பண்ணுவார்கள் (சங் 140:13)ல் வேதம் கூறுகிறது. தேவ சமூகத்தில் மகிமையும் கனமும் உள்ளது. (1 நாளா 16:27). அவருடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தம் உள்ளது. (சங் 16:11) இத்தகைய மகா பெரிய ஆசீர்வாதம் இயேசுவின் இரத்தம் நமக்கு வழங்குகிறது. அவர் சமூகத்தில் அமர்ந்து தேவனிடத்தில் பேசும் வார்த்தைகள் தான் ஜெபம் எனப்படும்.

**3. சவுக்கியமும் ஆரோக்கியமும் :** இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டோருக்கு கிடைக்கும். மூன்றாவது ஆசீர்வாதம் சவுக்கியமும் ஆரோக்கியம். இந்த சவுக்கியமும் ஆரோக்கியமும் எப்படி வருகிறது? அவர் தமது வசனத்தை அனுப்பி அழிவுக்கு விலக்கி காப்பார் (சங் 107:20) என்று வேதம் கூறுகிறது. அவர் வார்த்தை அவர் சமூகத்திலிருந்து வருகிறது. எரேமியா 33:6ல் அவர் வார்த்தை செய்யும் கிரியைகளைப் பாருங்கள்.

இதோ நான் அவர்களுக்குச் சவுக்கியமும், ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களை குணமாக்கி அவர்களுக்கு பரிபூரண சமாதானத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.

அவருடைய தழும்புகளால் நாம் சுகமாகிறோம் (ஏசா 53:5). அதனால் நமது சரீரம் அவர் ஆலயமாகவே மாற்றப்படுகிறது.

பிரியமானவர்களே! இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படுவோருக்கு உண்டாகும் ஆசீர்வாதங்கள் இவைகள். தேவன் மனிதனோடு வாசம் செய்யக்கூடும். உங்களுக்கு மேலும் தேவன் தம்மை வெளிப்படுத்துவாராக!

உங்கள் ஜெப உதவிக்கும், இச்சேவைக்கு நீங்கள் காணிக்கை அனுப்ப விரும்பினால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : **நம்பிக்கை ஜெப ஊழியம்,**
123, 9வது குறுக்குத் தெரு, பிரகாஷ் நகர், திருநின்றவூர் – 602024. Cell : 9381045396 , 9841897590.

தி பிரகாஷ் நகர் டைம்ஸ்-ல் விளம்பரம் செய்ய கைபேசி- 9841897590 E-mail : arulforchrist@gmail.com

VEEKAY INTERNATIONAL
CONTACT : 9940090852

We are please to inform that we have opened a new outlet at Prakash Nagar to serve your Travel Needs like Passport, Visa, Air Tickets, Rail Tickets, Hotel Booking, National & International, Local sight seeing and international tour operations like Honeymoon packages, Pilgrimage packages etc.
Please do drop your Visiting card / Cell Phone Number at

THE PRAKASH NAGAR TIMES
Engineering College Road, Prakash Nagar, Thiruninravur - 602 024.

Kitchen Queen

Do you want to decorate your kitchen?

✧ Keeps your grains away from ants and insects?
✧ Keeps your health away from Germs & Bacterias?

Less space is enough
Economic costing

9841897590